www.Padasalai.Net www.CBSEtips.in

மதுரை மாவட்டம் 22.09.2023

FTM

காலாண்டுத் தேர்வு – 2023

12 - ஆம் வகுப்பு

வணிகவியல்

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 X 1 = 20

1. அறிவியல் பூர்வ மேலாண்மை கோட்பாட்டை உருவாக்கி வளர்த்தவர்
அ) ஃபோயல் ஆ) டேலர் இ) மேயோ ஈ) ஜேக்கப்

2. குறியிலக்கு மேலாண்மை செயற்முறையின் முதல் நிலை எது?
அ) முக்கிய முடிவு பகுதியை நிர்ணயிப்பது ஆ) நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வது
இ) குறிக்கோள்களுடன் வளங்களைப் பொருத்துவது ஈ) அமைப்பின் குறிக்கோள்களை வரையறுப்பது

3. நிதிச் சந்தை வணிக நிறுவனங்களுக்கு .................. உதவுகிறது.
அ) நிதிகளை திரட்டுவதற்கு ஆ) பணியாட்களை தேர்வு செய்வதற்கு
இ) விற்பனையை அதிகரிப்பதற்கு ஈ) நிதித் தேவையை குறைப்பதற்கு

4. மூலதன சந்தை .............. ஐ வழங்குவதில்லை.
அ) குறுகிய கால நிதி ஆ) கடனுறுதி பத்திரங்கள் இ) சமநிலை நிதி ஈ) நீண்டகால நிதி

5. நம்பிக்கையற்ற ஊக வணிகர்கள் என்பவர்
அ) மான் ஆ) கரடி இ) காளை ஈ) வாத்து

6. செபியின் தலைமையகம் ..................... ஆகும்.
அ) கல்கத்தா ஆ) மும்பை இ) சென்னை ஈ) தில்லி

7. பணி மாற்றம் என்பது ஒரு ................. ஆட்சேர்ப்பு வளமாகும்.
அ) அக வள ஆ) புற வள இ) புறத்திறனீட்டல் ஈ) மேலே குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை

8. சமூக சந்தைப்படுத்துதல் என்பது .................. யுடன் தொடர்புடையது.
அ) சமூகம் ஆ) சமூக வகுப்பு இ) சமூக மாற்றம் ஈ) சமூக தீமை

9. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள்
அ) 01.01.1986 ஆ) 01.04.1986 இ) 15.04.1987 ஈ) 15.04.1990

10. சரக்கு விற்பனை சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு?
அ) 1962 ஆ) 1972 இ) 1930 ஈ) 1985

11. இணையத்திற்கு நுழைவு வாயில் என்பது
அ) போர்டல் ஆ) சிபியு இ) மோடம் ஈ) வெப்நராங்

12. பின்வருவனவற்றில் எது கண்ணுக்கு புலனாகாத ஒன்று?
அ) மனித வளம் ஆ) கைபேசி இ) ஆடைகள் ஈ) வாகனங்கள்

13. பணத்திற்காக பொருட்கள் அல்லது சேவைகளை ஊக்குவிப்பவர் அல்லது பரிமாற்றம் செய்பவர் ............... என அழைக்கப்படுகிறார்.
அ) விற்பனையாளர் ஆ) சந்தைப்படுத்துபவர் இ) வாடிக்கையாளர் ஈ) மேலாளர்

14. ஊழியர்களின் திறமை குறைபாடுகளைத் தடுக்க உதவுகிறது.
அ) பயிற்சி ஆ) வேலை பகுப்பாய்வு இ) தேர்வு ஈ) ஆட்சேர்ப்பு

15. தேர்வு பொதுவாக ............ செயல்முறையாகக் கருதப்படுகிறது.
அ) நேர்மறை ஆ) எதிர்மறை இ) இயற்கை ஈ) இவை எதுவுமில்லை

16. மின் - ஆட்சேர்ப்பு ................ வசதி மூலம் மட்டுமே சாத்தியமாகும்.
அ) கணினி ஆ) இணையம் இ) பிராட்பேண்ட் ஈ) 4 ஜி

17. தொழிலாளர் சுழற்சி முறை என்பது ஊழியர்களின் ................. நிறுவன விகிதமாகும்.
அ) நுழைவு ஆ) விடுப்பு இ) சம்பளம் ஈ) மேலே எதுவும் இல்லை

18. பொருத்துக.
1) நுகர்வோர் இயக்கத்தின் தந்தை - i) ரால்ப் நாடார்
2) தேர்வு செய்யும் உரிமை - ii) நுகர்வோர் உரிமை
3) நவீன சந்தைப்படுத்தல் மன்னர் - iii) நுகர்வோர்
4) நவீன சந்தைப்படுத்தலின் நோக்கம் - iv) நுகர்வோர் திருப்தி
அ) 1-i, 2-ii, 3-iii, 4-iv ஆ) 1-ii, 2-iii, 3-iv, 4-i இ) 1-iv, 2-iii, 3-i, 4-ii ஈ) 1-iii, 2-i, 3-ii, 4-iv



Kindly send me your study materials to padasalai.net@gmail.com
Scanned with CamScanner
www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in

19. கூற்று (A) : ஊழியர்களின் தன் முயற்சியானது நிறுவனத்திற்கு பலம் அளிக்கிறது.
கூற்று (B) : ஏனெனில் இது புதிய மற்றும் சிறந்த கருத்துகளை வழங்குகிறது.
அ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான சரியான விளக்கம்
ஆ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான தவறான விளக்கம்
இ) A சரி ஆனால் R தவறு ஈ) A தவறு ஆனால் R சரி

20. பொருந்தாத ஒன்றை கண்டறிக.
அ) வணிகத் தாள்கள் ஆ) கருவூல சீட்டு இ) கடனீட்டுப் பத்திரம் ஈ) தங்க முனை பத்திரங்கள்

**II குறிப்பு : ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும். வினா எண். 30திற்கு கட்டாயமாக பதிலளிக்கவும்.** 7 X 2 = 14

21. மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக.
22. மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர்கள் யார்?
23. துணைத் தரகர் என்றால் என்ன?
24. ஆட்சேர்ப்பு முறையில் வேட்டையாடுதல் என்றால் என்ன?
25. சந்தையிடுகை கலவையின் வரைவிலக்கணம் தருக.
26. கலப்படத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
27. ஜான் F கென்னடி இன் கூற்றுப் படி நுகர்வோரின் உரிமைகள் என்ன?
28. "தகவல் பெருவதற்கான உரிமை" பற்றி சிறு குறிப்பு எழுதுக.
29. உடனடி சந்தை என்றால் என்ன?
30. தகுந்த பணிக்கு தகுதியான நபர்களை தேர்வு செய்தபின் நிரவாகத்தின் அடுத்த கட்ட பணி சரியான .............. ஏற்பாடு செய்ய வேண்டும்.

**III குறிப்பு : ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும். வினா எண். 40திற்கு கட்டாயமாக பதிலளிக்கவும்.** 7 X 3 = 21

31. குறியிலக்கு மேலாண்மையின் இயல்புகளை எழுதுக.
32. இரண்டாம் நிலைச் சந்தை - சிறு குறிப்பு வரைக.
33. கருவூல உண்டியல் வகைகளை விளக்கவும்.
34. மான் மற்றும் முடவாத்து - விளக்குக.
35. மன அழுத்த நேர்காணல் என்றால் என்ன?
36. தனியிடச் சந்தை பற்றிய செயல்பாடுகள் விளக்குக.
37. செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன?
38. "உடல்நலம் மற்றும் பாதுகாப்பைப் பாதுகாப்பதற்கான உரிமை" பற்றி நீவிர் அறிவது என்ன?
39. துணிகர மூலதன நிதி மற்றும் ஏட்டுக் கடன் தரகு முகமை நிறுனங்கள் பற்றி விளக்குங்கள்.
40. .............. நேர்காணல் ஒரு குறிப்பிட்ட துறையில் நேர்காணல் செய்பவரின் அறிவின் அளவை தீவிரமாகவும் விரிவாகவும் சோதிக்க நடத்தப்படுகிறது.

**IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5 X 7 = 35

41. நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் ஐந்து) ***(அல்லது)***
பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் இடையே உள்ள வேறுபாடுகள் ஏதேனும் ஐந்து தருக.
42. ஆட்சேர்ப்பில் சமீபத்திய போக்குகள் என்ன? ***(அல்லது)***
பல்வேறு வகையான நிதிச் சந்தைகளை விவரிக்க. (ஏதேனும் ஐந்து)
43. செபியின் பணிகளை விவரி. (ஏதேனும் ஐந்து) ***(அல்லது)***
பயிற்சியின் பல்வேறு முறைகளை விவரி. (ஏதேனும் ஐந்து)
44. மனித வளத்தின் சிறப்பியல்புகளை விளக்குங்கள். (ஏதேனும் ஐந்து) ***(அல்லது)***
சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சி பற்றி விவரி. (ஏதேனும் ஐந்து)
45. நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்? ***(அல்லது)***
புதிய நிதி நிறுவனங்களின் பல்வேறு வகைகளை விளக்கவும்.
46. பல்வேறு வகையான சோதனைகளை சுருக்கமாக விளக்குக. (ஏதேனும் ஐந்து) ***(அல்லது)***
பங்கு சந்தை மற்றும் பண்டகச் சந்தை ஆகியவற்றை வேறுபடுத்துங்கள்.
47. நுகர்வோரின் பொறுப்புகள் யாவை? (ஏதேனும் ஐந்து) ***(அல்லது)***
பணச் சந்தை மற்றும் மூலதனச் சந்தை வேறுபடுத்துங்கள். (ஏதேனும் ஐந்து)



Kindly send me your study materials to padasalai.net@gmail.com
Scanned with CamScanner

**+2 வணிகவியல் காலாண்டுத் தேர்வு செப் - 23**

**சரியான விடை**

1. (ஆ) டேலர்
2. (ஈ) அமைப்பின் குறிக்கோள்களைவரையறுப்பது
3. (அ) நிதிகளை திரட்டுவதற்கு
4. (அ) குறுகிய கால நிதி
5. (ஆ) கரடி
6. (ஆ) மும்பை
7. (அ) அக வள
8. (ஆ) சமூக வகுப்பு
9. (இ) 15.04.1987
10. (இ) 1930
11. (இ) மோடம்
12. (அ) மனித வளம்
13. (ஆ) சந்தைப்படுத்துபவர்
14. (அ) பயிற்சி
15. (ஆ) எதிர்மறை
16. (ஆ) இணையம்
17. (ஆ) விடுப்பு
18. (அ) i ii iii iv
19. (அ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான விளக்கம்
20. (இ) கடனீட்டுப் பத்திரம்

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. மேலாண்மைக் கருவிகள்:** கணக்கியல், வணிகச்சட்டங்கள், உளவியல், புள்ளியியல், பொருளியியல், தரவுச் செயலாக்கம்

**22. மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர்கள்:** தனிநபர், நிறுமங்கள், அரசு வங்கிகள், இதர நிதி நிறுவனங்கள்

**23. துணைத்தரகர்** என்பவர் பங்கு மாற்றகத்தின் உறுப்பினரின் முகவராகச் செயல்படுபவர். தன்னை அமர்த்திய முதல்வருக்கு அதாவது உறுப்பினருக்கு வியாபாரத்தை பெற்றுத்தந்து அதற்காகக் கழிவு பெறுவார்.

**24. ஆட்சேர்ப்பு முறையில் வேட்டையாடுதல்** போட்டி நிறுவனங்களில் உள்ள பணியாளர்களுக்கு நிதி மற்றும் நிதிசாராத சலுகைகளை கூடுதலாக வழங்கி அப்பணியாளர்களை கவர்ந்து பணியில் அமர்த்துவது வேட்டையாடுதல் ஆகும்.

**25. சந்தையிடுகை கலவையின் வரைவிலக்கணம் ஜெரோமி எம்.சி. கார்தோ** கூற்றுப்படி சந்தையிடுகைக் கலவை நான்கு கூறுகளைக் கொண்டுள்ளது. அவை பொருள் கூறுகள், விலைக் கூறுகள், இடக்கூறுகள் மற்றும் விற்பனை மேம்பாட்டுக் கூறுகளை உள்ளடக்கியது.

**26. கலப்படத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள்**
தேங்காய் எண்ணெயில் பாமாயில் கலப்பது.
மிளகுடன் பப்பாளி விதை சேர்ப்பது

**27. ஜான். F. கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள்:** பாதுகாப்பில் உரிமை, தகவல் பெறும் உரிமை, தேர்ந்தெடுக்கும் உரிமை, கேட்கும் உரிமை

**28. தகவல் பெறும் உரிமை:** நுகர்வோர் வாங்க விரும்பும் பொருளின் தகவலை விற்பவர் தரவேண்டும்.
தூய்மை, தரம், ஆற்றல், பயன்பாடு பற்றியதாக அந்தத் தகவல் இருக்க வேண்டும்.

**29. உடனடி சந்தை:** பொருளுக்கான விற்பனை நடவடிக்கை முடிவடைந்த அதே நேரத்தில் அப்பொருள் விநியோகம் செய்வது மட்டுமின்றி உடன் உரிமை மாற்றமும் செய்யப்படுகிறது.

**30.** தகுந்த பணிக்கு தகுதியான நபர்களை தேர்வு செய்தபின் நிர்வாகத்தின் அடுத்த கட்ட பணி சரியான **பயிற்சிக்கு** ஏற்பாடு செய்ய வேண்டும்.

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி : 7X3=21**

**31. குறியிலக்கு மேலாண்மையின் இயல்புள்:**
சமுதாய குறிக்கோள்களுடன் அமைப்பின் குறிக்கோள்களை தொடர்புபடுத்துதல்.
நோக்கத்தை மாற்ற அதிகாரத்துடன் இருப்பவர்களுடன் ஆலோசனை செய்கிறது,
நம்பிக்கை, நல்லெண்ணம் மற்றும் விருப்பத்திற்கேற்ப செயல்படுவதற்குரிய ஒரு சூழலை ஊக்குவிக்கிறது.

**32. இரண்டாம் நிலைச் சந்தை** ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை இரண்டாம் நிலைச் சந்தை ஆகும்.
இதில் பங்கு மாற்றகம் ஒரு முக்கியமான நிறுவனம் ஆகும்.
நிதி கோருதலின் வெளியீட்டுக் கால அடிப்படையில் செயல்படும்.

**33. கருவூல இரசீதின் வகைகளை விவரி**
91 நாட்கள் கருவூல ரசீதுகள் 4 சதவீத தள்ளுபடியில் வெளியிடுதல்,
182 நாட்கள் கருவூல ரசீதுகள் - ஒரு வாரம் முழுவதும் வடிகட்டும் அடிப்படையில் வெளியிடுதல்,
364 நாட்கள் கருவூல இரசீதுகள் - நிலையான தள்ளுபடி இல்லை.

**34. கலை மான்:-** கலைமான் ஊக வணிகர் முன்னெச்சரிக்கை உடையவர். ஒரு நிறுமத்தின் பங்குகள் முனைமத்தில் விற்கப்படும் போது அதைப்பெற்று விற்கக் கூடியவர். இவர் முனைம வேட்டையாளர் என்று அழைக்கப்படுகிறார்.
**முடவாத்து:-** தம் நடவடிக்கையால் உள்ள இடர்பாடுகளைத் தீர்ப்பதில் போராடிக் கொண்டிருக்கிற கரடி ஊக வணிகரே முடவாத்து எனப்படுகிறார்.

**35. மன அழுத்த நேர்காணல்** விண்ணப்பதாரரிடம் வேண்டும் என்றே மன அழுத்தம் தரும் வகையில் கேள்விகள் கேட்கப்படும், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் அழுத்தத்தை சமாளிக்கும் திறனை சோதிக்க இத்தகைய நேர்காணல் நடத்தப்படுகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**36. தனியிடச்சந்தை:** உண்மையில் இது ஒரு சந்தையே அல்ல. குறிப்பிட்ட ஒரு பிரிவு வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய தேவையான அனைத்து முயற்சிகளின் செயல்பாடாகும். **எ.கா:** விளையாட்டுச் சேனல்கள் அதற்காக மட்டும் ஏற்படுத்தப்படுகிறது.

**37. செயற்கைப் பற்றாக்குறை:** வணிகர்கள் தேவைக்கு அதிகமான அளவு சரக்குகளை இருப்பு வைத்திருந்தாலும் கூட தங்கள் கடைகளின் முகப்பில் இருப்பு இல்லை எனும் பெயர் பலகையை வைப்பது செயற்கைப் பற்றாக்குறை ஆகும்.

**38. உடல் நலம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பாதுகாப்பு உரிமைகள்:**
தற்போதைய சட்டங்கள் பாதுகாப்பில்லாத பொருட்களை தயாரிப்பதோ அல்லது விற்பனை செய்வதோ கூடாது என்ற கடமை விற்பனையாளர்களுக்கும் மற்றும் உற்பத்தி செய்பவர்களுக்கும் உள்ளது.

**39. துணிகர நிதி நிறுவனம்:-** இது சாதாரண நிதியின் ஒரு பகுதி. இது புதிய திட்டம் அல்லது கண்டுபிடிப்புக்கான நிதி வழங்க உருவாக்கப்பட்டது. இது நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு உதவுகிறது.

**ஏட்டுக் கடன் தரகு முகமை:-** விற்பனை மூலம் பெற வேண்டிய பெறுதல்களின் அடிப்படையாக நிதி நிறுவனங்கள் செய்யும் நிதி ஏற்பாடே ஏட்டுக்கடன். இவை கழிவுக்காக ஏட்டுக் கடன்களை வசூலிக்கும்.

**40. ஆழ்ந்த** நேர்காணல் ஒரு குறிப்பிட்ட துறையில் நேர்காணல் செய்பவரின் அறிவின் அளவை தீவிரமாகவும் விரிவாகவும் சோதிக்க நடத்தப்படுகிறது.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகள்:**

**வேலைப்பகிர்வு:-** தொழிலமைப்பின் மொத்த பணிச்சுமையும் பகிர்வு செய்யப்பட வேண்டும்.

**ஒழுங்குமுறை:-** கீழ்படிதல் முறைப்படி நடத்தல், அதிகாரத்தை மதித்தல் ஆகியவை நிறுவனம் நன்கு நடைபெற அவசியம் ஆகும்.

**கட்டளையொருமை:-** ஒவ்வொரு கீழ் பணியாளரும் ஒரே ஒரு மேலதிகாரிடமிருந்து மட்டுமே கட்டளைகளை பெற வேண்டும்.

**ஆணையுரிமை வரிசை:-** ஆணையுரிமையின் வரிசை உயர்மட்ட அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்தில் உள்ள பணியாளர் வரை படிப்படியாக கீழ்நோக்கி வர வேண்டும்.

**ஊதியம்:-** ஊதியம் என்பது பணியாளர்களின் பணிக்கு கொடுக்கப்படும் விலையாகும்.

| 41. ஆ. பங்குகள் | கடன் பத்திரங்கள் |
|---|---|
| பங்கு முதலில் ஒரு பங்கு | இது ஒரு கடன் ஆவணம் |
| பங்குகளை வைத்திருப்பவர் உரிமையாளர் | கடன்பத்திரங்களைவைத்திருப்பவர் கடனீந்தோர் |
| பங்காதாய வீதம் மாறக்கூடியது | வட்டிவீதம் நிலையானது |
| வாக்களிக்கும் உரிமை உண்டு | வாக்களிக்கும் உரிமை இல்லை |
| சில நிபந்தனைக்குட்பட்டு தள்ளுபடியில் வெளியிட முடியும் | கடன்பத்திரங்களை தள்ளுபடியில் வெளியிடலாம் |

**42.அ) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள சமீபகால போக்குகளை விளக்குக.**

**புறத்திறனீட்டல்:-** ஆட்சேர்ப்பு பணியினை மேற்கொள்ள சேவைக்கட்டணம் வழங்கும் நிறுவனங்களின் விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்து சரியான பணிக்கு சரியான நபரை தேர்ந்தெடுத்து கொடுக்கும் பணியினை புறத்திறனீட்டல் நிறுவனங்கள் செய்கின்றன.

**புறம்பான திறன் மற்றும் ஆற்றல் கொண்ட நபரை வேட்டையாடுவது:-** நிறுவனங்கள் தங்களது சொந்த பணியாளர்களுக்கு பயிற்சி மற்றும் மேம்பாடுகள் வழங்குவதற்கு பதிலாக போட்டி நிறுவனங்களில் உள்ள பணியாளர்களுக்கு நிதி மற்றும் நிதிசாராத சலுகைகளை கூடுதலாக வழங்கி அப்பணியாளர்களை கவர்ந்து பணியில் அமர்த்துகிறது. இது கவர்தல் என்றும் அழைக்கப்படுகிறது. அல்லது திறமையானவர்களை வேட்டையாடுதல் எனப்படுகிறது.

**42.ஆ) பல்வேறு வகையான நிதிச்சந்தைகள்:**
நிதிச்சந்தைகள் நிதிகோருதல் அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன.

**வகை:- கடன் சந்தை :-** கடன் கருவிகளை வணிகம் செய்வது (எகா) அரசு பத்திரங்கள்

**சமநிலை பங்குச் சந்தை:-** பங்குளை வணிகம் செய்வது (எகா) நிறும பங்குகள்

**முதிர்வு:- பணச்சந்தை:-** குறுகிய காலத்தில் முதிர்வு அடைவது (ஒரு ஆண்டுக்குள்) (எகா) கருவூலச்சீட்டு

**மூலதனச் சந்தை:-** நீண்ட காலத்தில் அடைவது (ஓராண்டுக்கு மேல்) (எகா) பங்குகள்

**வெளியீட்டுக்காலம்:- முதல்நிலைச் சந்தை :-** புதிய வெளியீடுகளுக்கான சந்தை

**இரண்டாம் நிலைச் சந்தை:-** ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை

**வழங்கல்:- உடனடிச் சந்தை:-** ஆவணமும், ரொக்கமும் உடனடியாக பெறுதல்.

**எதிர்கால சந்தை:-** ஆவணமும், ரொக்கமும் பின் ஒரு நாளில் பெறுதல்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**அமைப்பு:- பரிமாற்றக வர்த்தகச் சந்தை:-** ஒழுங்கு நடைமுறைகளை கொண்ட அமைப்பு (பங்கு மாற்றகம்)

**உடனடி சந்தை:-** வழக்கமான நடைமுறைகளை கொண்டது.

**43.அ) செபியின் பணிகளை விவரி**

போதுமான கல்வி மற்றும் வழிகாட்டல் மூலம் முதலீட்டாளர்களின் நலனை பாதுகாக்கிறது.

பங்குச் சந்தைகளில் வியாபாரத்தை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்.

பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை தடை செய்கிறது.

நிதி இடைத்தரகர்களுக்கு பொருத்தமான பயிற்சி அளித்தல். மத்திய அரசால் வழங்கப்படும் செயல்பாடுகளை செயல்படுத்துதல்.

**43.ஆ) பயிற்சியின் பல்வேறு முறைகளை:**

**வழிகாட்டும் பயிற்சி முறை:-** ஒரு பணியாளர் தங்களின் அறிவு மற்றும் அனுபவத்தை பகிரிந்து கொள்ளும் செயல் முறை ஆகும்.

**பணி சுழற்சி முறை:-** பணியாளரை ஒரு வேலையிலிருந்து மற்றொரு வேலைக்கோ அல்லது ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கோ மாற்றப்படுவதாகும்.

**மின்னணுகற்றல்முறை:** வகுப்பறையில் அல்லது அலுவலகத்தில் தொழில் நுட்பசெயல் முறையை பயன்படுத்துவது.

**குழு கலந்துரையாடல் முறை:-** ஒரு தலைப்பை விவாதிக்க இந்த முறையின் கீழ் பங்கேற்பாளர்கள் பல்வேறு குழுக்களாக பிரிக்கப்படுகிறார்கள்.

**சூழ்நிலை ஆய்வு முறை:-** ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் தீர்வினைக் கண்டுபிடிக்க பயன்படுவதாகும்.

**44.அ, மனித வளத்தின் சிறப்புயல்புகள் ஏதேனும் ஐந்து விவரி.**

உற்பத்தி செய்யும் ஓரே காரணியாக மனித வளம் திகழ்கிறது.

பிற அனைத்து வளங்களையும் மனித வளம் உருவாக்குகிறது.

மனித வளங்களின் நடத்தைகளை ஊகிக்க முடியாது.

மனித வளங்கள் உணர்ச்சி பூர்வமானவை.

மனித வளங்கள் நகரும் தன்மை கொண்டவை

**44 ஆ. சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சி**

**பண்டமாற்று முறை:-** பண்டங்களுக்கு இணையாக பண்டங்களை மட்டுமே மாற்றிக் கொள்ளுதல்.

**உற்பத்தி சார்ந்தது:-** நுகர்வோரின் விருப்பங்களுக்கு மாறாக லாப நோக்கத்தோடு அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டது.

**விற்பனை சார்ந்தது:-** விற்பனையே ஒரு முற்போக்கு காரணியாக கருதப்படுகிறது.

**சந்தையிடுகை சார்ந்தது:-** விற்பனை செய்ய வாடிக்கையாளர்களின் முக்கியத்துவம் உணரப்பட்டது.

**நுகர்வோர் சார்ந்தது:-** நுகர்வோருக்கு சுவை, விருப்பம், மனநிறைவு ஏற்படுத்துவதற்கு பொருள்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

**45.அ. நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்?**

**அதிகவிலைக்கு விற்றல்:-**பொருளின் விலையைவிட கூடுதலானவிலையில் விற்று நுகர்வோரை ஏமாற்றுகின்றனர்.

**கலப்படம்:-** உணவுப் பொருட்களில் உடலுக்கு கேடு செய்யும் பொருட்களை இலாபத்துக்கு ஆசைப்பட்டு கலப்படம் செய்கின்றனர்.

**போலியான பொருட்கள்:-** மக்கள் மத்தியில் பிரபலமாக உள்ள பொருட்களை போலியாக செய்து விற்று நுகர்வோர்களை ஏமாற்றுகின்றனர்.

**செயற்கை பற்றாக்குறை:-** வியாபாரிகள் பொருட்களை இருப்பு வைத்துக் கொண்டு இருப்பு இல்லை என செயற்கைப் பற்றாக்குறையை ஏற்படுத்தி இலாபம் ஈட்டுகின்றனர்.

**தரக்குறைவு:-** கட்டுமானம் செய்து விற்கப்படும் பொருட்களைத் திறந்து பார்த்தால் பல சமயங்களில் தரம் குறைந்த பொருட்களே இருக்கும்.

**45 ஆ) நிதிச் சந்தையின் பல்வேறு வகையான புதிய நிறுவனங்களை விளக்குக.**

**துணிகர நிதி நிறுவனம்:** இது சாதாரண நிதியில் ஒரு பகுதியாகும்.

இது புதிய திட்டம் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கு நிதி வழங்குவதற்காக உருவாக்கப்பட்டதாகும்.

**பரஸ்பர நிதி:** சிறு முதலீட்டாளர்களின் சேமிப்புகளை பெரிய முதலீடுகளாக மாற்றும் நிதி நிறுவனங்களையே பரஸ்பர நிதி என்கிறோம்.

**ஏட்டுக்கடன் தரகு முகமை நிறுவனங்கள்:** விற்பனை மூலம் பெற வேண்டிய பெறுதல்களின் அடிப்படையில் நிதி நிறுவனங்கள் செய்யும் நிதி ஏற்பாடே ஏட்டுக்கடன் தரகு முகமை ஆகும்.

**இந்திய உடனடி பங்கு மாற்றகம்:** பங்குகளை இந்தியா முழுவதும் மின்னணு மூலம் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு முதன்மை நிதி நிறுவனங்களால் உருவாக்கப்பட்டதே **OTCEI** ஆகும்.

**இந்திய தேசியப் பங்கு மாற்றகம்:** பங்குச் சந்தையின் மாதிரியாக **NESI** என்பது **1992ம்** ஆண்டு உருவாக்கப்பட்டது.

**46.அ) பல்வேறு வகையான சோதனைகள் சுருக்கமாக விளக்குக.**

**மனோபாவச் சோதனை:-** விண்ணப்பதாரரின் மனநிலையை அளவிடும் சோதனை ஆகும்.

**அடைவுச் சோதனை:-** விண்ணப்பதாரரின் அடைவுத் திறனை அளவிடும் சோதனையாகும். கல்வி நிறுவனங்கள் வழக்கமாக நடத்தப்படும் தேர்வுகள்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**நுண்ணறிவுச்சோதனை:-**இது மூளையின் சிந்திக்கும் ஆற்றல், மனத்திறன், நுண்ணறிவு போன்றவற்றை சோதித்தல்.

**முடிவெடுக்கும் திறன் சோதனை:-** இச்சோதனை விண்ணப்பதாரர்களின் சூழ்நிலைக்கேற்ப முடிவெடுக்கும் திறனை சோதிக்க பயன்படுகிறது.

**ஆர்வச் சோதனை:-** தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் ஆர்வம் எத்துறையில் மிகுதியாக உள்ளதோ அத்துறையில் பணியை ஒதுக்குதல்.

| 46. ஆ சிறப்பியல்புகள் | பங்கு பரிவர்த்தனை (பங்குச் சந்தை) | பண்டமாற்று பரிவர்த்தனை (பொருட்கள் பரிமாற்றம்) |
|---|---|---|
| பொருள் | பத்திரங்களை வாங்குதல் மற்றும் விற்றல் | பண்டங்கள் வர்த்தகம் செய்யப்படும். |
| பணிகள் | சந்தைப்படுத்துதலை எளிதாக்குகிறது | நீர்மைத் தன்மையை ஏற்படுத்துதல். |
| நோக்கம் | மூலதன உருவாக்கம் | மூலப்பொருள் விற்பனையை அதிகரித்தல். |
| பங்கேற்பாளர்கள் | முதலீட்டாளர்கள் மற்றும் ஊக வணிகர்கள் | தயாரிப்பாளர்கள், முகவர்கள், வியாபாரிகள் மற்றும் ஊக வணிகர்கள். |
| ஒப்பந்தங்களின் காலம் | பதினைந்து நாட்கள் | 2 அல்லது 3 மாதங்கள். |

**47.அ) நுகர்வோரின் பொறுப்புகள்**

விற்பனை ஒப்பந்தப்படி பொருளுக்கான விலையை நுகர்வோர்கள் செலுத்த வேண்டும்.

விலை செலுத்தியவுடன் உரிய நேரத்தில் உரிய இடத்தில் பொருட்களைப் பெற்றுக் கொள்வது நுகர்வோரின் பொறுப்பாகும்.

குறித்த நேரத்தில் நுகர்வோர் பொருட்களைப் பெற்றுக் கொள்ளவில்லை என்றால் அதனால் ஏற்படும் நட்டத்திற்கே அவரே பொறுப்பாகும்.

நுகர்வோர் வாங்கியப் பொருட்களை அதன் விதிமுறை செயல்முறைக்கேற்ப முன்னெச்சரிக்கையுடன் பயன்படுத்த வேண்டும்.

நுகர்வோர் பொருட்களை வாங்கும் போது விற்பனையாளரிடமிருந்து ரொக்க இரசீது பெற வேண்டும்.

| 47 ஆ தன்மைகள் | பணச் சந்தை | மூலதனச் சந்தை |
|---|---|---|
| நிதியின் காலம் | ஒரு வருட காலத்திற்குள் அதாவது குறுகிய காலச் சந்தை | ஒரு வருட காலத்திற்கும் மேல் அதாவது நீண்ட காலச் சந்தை |
| வணிக ஆவணங்கள் | வணிக இரசீதுகள், மாற்றுமுறை ஆவணங்கள், கருவூலச் சீட்டு, வணிகத்தாள் போன்றவை | பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள், அரசுப் பத்திரங்கள் |
| பண மதிப்பு | ஒரு கருவூல இரசீதின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 1 இலட்சம் வைப்புசான்றிதழ் மற்றும் வணிகத்தாளின் குறைந்தப்பட்ச மதிப்பு ரூ25 இலட்சம் | ஒரு பங்கின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 10 ஒரு கடனீட்டுப் பத்திரத்தின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 100 |
| இடர் அளவு | கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்த அளவு | கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்த அதிக அளவு |
| ஒழுங்குபடுத்தும் அமைப்பு | மையவங்கி | மைய வங்கி மற்றும் செபி |

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com